**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 437** **நாள் : 13.12.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஜனவரி 2025 முதல் 12.12.2025 வரை 3.51 இலட்சம் மெட்ரிக் டன் கட்டட இடிபாட்டுக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சராசரியாக நாளொன்றுக்கு 6,300 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகரினை சிங்காரச் சென்னையாக திகழச் செய்திடும் வகையில் சாலைகள், தெருக்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பாலங்கள், பேருந்து நிறுத்தங்கள், மயானபூமிகள் உள்ளிட்ட பொது இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக்கழிவுகள் திருவாளர் பிரிமீயர் பிரிசிசன் சர்ஃபேஸ் (M/s. Premier Precision Surface) நிறுவனத்தின் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இப்பணிகளுக்காக 15 மண்டலங்களிலும் டிப்பர் வாகனங்கள், பாப்காட் வாகனங்கள், ஜே.சி.பி. வானகங்கள், டாடா ஏஸ் வாகனங்கள், டிப்பர் லாரிகள் உள்ளிட்ட 168 வாகனங்களைப் பயன்படுத்தி சராசரியாக நாளொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

கடந்த 07.01.2025 முதல் 12.12.2025 வரை 3.51 இலட்சம் மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள கட்டடக் கழிவுகள் பிரித்தெடுக்கும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு தனித்தனியாக பிரித்து மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் அனைத்து பகுதிகளையும் வாரத்தில் மூன்று முறை ஆய்வு செய்து, அவ்விடங்களில் உள்ள கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை ஒப்பமுறைப்படி அகற்றவும், சாலைகளின் தூய்மையைப் பராமரிக்கும் விதமாக மாநகராட்சி அலுவலர்கள், திட்ட மேலாண்மைப் பணியாளர்கள்

(PMC) மற்றும் ஒப்பந்ததாரர் மேற்பார்வையாளர்கள் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளின் இருப்பிடத்தை தெரிவிக்க பெருநகர சென்னை மாநகராட்சியில் செயலி (app) வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம் கட்டுமானக் கழிவுகளின் இருப்பிடங்கள் தெரிவிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெற்ற பின் ஒப்பந்ததாரர் கழிவுகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. கழிவுகள் அகற்றப்பட்ட பின்னரும் அதனை புகைப்படம் எடுத்து பதிவேற்றம் செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றுவது தொடர்பாக பொதுமக்களுக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் 21.04.2025 முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து அலுவலர்களுக்கும் கருத்துப்பட்டறை மற்றும் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சாலைகளிலும், தெருக்களிலும், குடியிருப்புப் பகுதிகளிலும், வணிக வளாகப்பகுதிகளிலும் கட்டடக் கழிவுகள் கொட்டப்பட்டு நீண்ட நாட்களாக அகற்றப்படாமல் இருப்பது முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் குறித்த வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றாதவர்களிடமிருந்து ஜனவரி-2025 முதல் 12.12.2025 வரை 39.30 இலட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை பெருநகர சென்னை மாநகராட்சி (https://chennaicorporation.gov.in/gcc/CandD_Waste_Management/) இணையதளத்திலும், மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணிலும் தொடர்பு கொண்டும் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் வாரியாக கட்டடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றிய விவரம்** : (07.01.2025 **முதல்** 12.12.2025 **வரை**)

| வ. எண் | மண்டலங்கள் | கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 15,616 |
| 2. | மணலி | 13,360 |
| 3. | மாதவரம் | 21,009 |

| | | |
|---|---|---|
| 4. | தண்டையார்பேட்டை | 27,457 |
| 5. | இராயபுரம் | 24,675 |
| 6. | திரு.வி.க.நகர் | 22,177 |
| 7. | அம்பத்தூர் | 21,427 |
| 8. | அண்ணாநகர் | 31,607 |
| 9. | தேனாம்பேட்டை | 36,733 |
| 10. | கோடம்பாக்கம் | 33,143 |
| 11. | வளசரவாக்கம் | 16,050 |
| 12. | ஆலந்தூர் | 19,028 |
| 13. | அடையாறு | 35,058 |
| 14. | பெருங்குடி | 19,429 |
| 15. | சோழிங்கநல்லூர் | 15,068 |
| மொத்தம் | | 3,51,837 |

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**